பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 07 செவ்வாய்க்கிழமை 23.07.2024 கதிர் 258

## 16,000 ஆசிரியர் நியமனங்கள்

பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் 16,000 ஆசிரியர் நியமனங்களை வழங்கி ஆசிரியர் பற்றாக்குறைக்கு ஆளும்தரப்பு தீர்வை வழங்கியுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ☞ 2

## ஹிருணிக்காவுக்குப் பிணை

2015இல் இளைஞர் ஒருவரின் கடத்தலுடன் தொடர்புடைய சம்பவத்தில் 3 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கொழும்பு மேல் நீதிமன்றம் இவ்வுத்தரவை வழங்கியுள்ளது. குறித்த பிணை கோரிக்கை நேற்று கொழும்பு ☞ 8

### பொருளாதார மீட்சிக்கு எடுத்தது போன்று

## வெள்ளம், டெங்கை கட்டுப்படுத்தவும் கடினமான தீர்மானங்களே தேவை

### சாகல ரத்னாயக்க தெரிவிப்பு

ஏற்பதற்குக் கடினமான தீர்மானங்களை எடுத்து நாட்டைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டது போன்றே, வெள்ளம் மற்றும் டெங்கு பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான முடிவுகளையும் எடுக்க வேண்டும் என்றும், அதன் பிரதிபலன்கள் இன்னும் சில வருடங்களில் தெரியும் எனவும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்ற இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் - கொழும்புக் கிளையால் நடத்தப்படும் வெள்ள அபாயங்கள் மற்றும் டெங்கு ஒழிப்பு பிரச்சாரத்தின் ஆரம்பநிகழ்வில் பங்குபற்றிய தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பேரிடம் ஏற்படும் சந்தர்ப்பத்தில், ஆளும்தரப்பு பல்வேறு அமைப்புகள் மற்றும் நாடுகள் அதற்காகப் பெருமளவில் பணம் செலவிட வேண்டியுள்ளது. வெள்ள நிலை ☞ 8

## இது ரகசியம் அல்ல!

தமிழ்த் தேசியம் பேசும் 7 கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபைக்கும் இடையில் நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தம் யாழ்ப்பாணத்தில் கைச்சாதிடப்பட்டதை வாசகர்கள் அறிந்திருப்பார்கள். யாழ். நகரின் மத்தியில் உள்ள தந்தை செல்வா அரங்கின் சிறிய மண்டபத்தில் இந்த நிகழ்வு நடந்தது.

அறப்படிச்சபல்லி கூழ்பானைக்குள் விழுந்த கதையாக என்று ஒரு சொலவடை தமிழில் உள்ளது. அதாவது எல்லோருக்கும் நல்லது கெட்டது எது என்பதைக் கூறக்கூடிய பல் ஒருநாள் கூழ்பானைக்குள் விழும்போது தனக்கு எது நல்லது கெட்டது என்று கணிக்க முடியாமல் போய்விட்டது என்பது அதன் பொருள். நேற்றைய தினம் அதுபோன்றதொரு சம்பவத்தை இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்த கைச்சாத்து நிகழ்வில் காண முடிந்தது.

ஜூன் 29 வவுனியாவில் இடம்பெற்ற கூட்டத்தில் 7 தமிழ்க் கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச்சபை எனப்படும் குடிமைச் சமூகங்களின் அமைப்பும் இணைந்து உருவாக்கும் புதிய அமைப்புக்கு தமிழ் தேசிய பேரவை என்று பெயர் சூட்டப்படுவதாக ☞ 2

# விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன்

### நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

**விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக விவசாய தொழில் முயற்சியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடன்களை வழங்கும் செயல்முறை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஜனாதிபதி அலுவலகத்தில் கையெழுத்திடப்பட்டது.**

**முதல் கட்டத்தில், இந்த வேலைத் திட்டத்திற்கு பங்களிப்பை வழங்கும் இலங்கை வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியவற்றுடன், விவசாய, பெருந்தோட்ட** ☞ 2

## எசல பெரஹரா நேற்று

வரலாற்றுச் சிறப்பு மிக்க கதிர்காமம் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் இறுதிநாள் எசல மஹா பெரஹரா வீதி உலா வந்தது.

வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காம விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியும், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்க முதலில் கிரிவெஹர விகாரை பீடாதிபதி வண. கொபவக்க தம்மிந்த நாயக்க தேரரைச் சந்தித்து ஆசிகளைப் பெற்றுக்கொண்டார். பின்னர் விகாரையில் நடைபெற்ற சமய நிகழ்வுகளில் கலந்துகொண்டு கதிர்காமம் சமன் மகா தேவாலயம் உள்ளிட்ட தேவாலயங்களுக்குச் சென்று ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார்.

கதிர்காம ஆலயத்தின் வருடாந்த எசல மஹா பெரஹரா உற்சவத்தின் இறுதி நாளான நேற்று கிரிவெஹர விகாரையின் விகாராதிபதி கொபவக தம்மிந்த ☞ 8

## தேர்தல் பணிகளை தொடக்க தபால் திணைக்களம் தயார்

தேர்தல்கள் ஆணைக் குழுவினால் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டவுடன் ஜனாதிபதி தேர்தலுக்கான பணிகளை ஆரம்பிக்க தபால் திணைக்களம் முழுமையாக தயாராக உள்ளதாக பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள தபால் திணைக்களத்தின் தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

சுமூகமான தேர்தல் நடைமுறையை உறுதிப்படுத்த தேவையான அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் உள்ளன. அனைத்து வீடுகளுக்கும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை ☞ 8

## இந்து சமுத்திரம் ஊடான பயணத்தை உறுதிப்படுத்துவதில் ஆஸி. தீர்க்கம்

இந்து சமுத்திரத்தின் ஊடான பயணத்தை உறுதிப்படுத்தவும், பிராந்திய நாடுகளின் இறையாண்மையைப் பாதுகாப்பதற்கும் ஆதரவளிக்க அவுஸ்திரேலியா அர்ப்பணிப்புடன் இருப்பதாக அவுஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் ஸ்கொட் மொரிசன் ☞ 8

## கட்டுப்பாட்டு விலை பாணுக்கு வரும்

பாணிற்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். பாண் பல்வேறுபட்ட விலைகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. இது தொடர்பில் பொதுமக்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. எனவே, பாணின் விலையைக் குறைக்க வெதுப்பக உரிமையாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் பாண் இறாத்தலுக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க நேரிடும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ ☞ 8

## உரிய நேரத்தில் தேர்தலை நடத்து

### கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

ஜனாதிபதித் தேர்தலை திட்டமிட்டபடி நடத்தக் கோரி, பல சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் நேற்று இராஜகிரியில் உள்ள தேர்தல் செயலக அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

'சிறிகொத்தா சதிப் புரட்சிக்கு இடமளிக்கக் கூடாது, ஜனாதிபதித் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும், சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரம் உடனடியாக அமுல்படுத்தப் ☞ 8

## சர்வதேச நாணய நிதியக் குழு இவ்வாரம் இலங்கை வருகை

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு இவ்வாரம் நாட்டுக்கு வருகை தரவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார முன்னேற்ற நிலை மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் பேச்சு வார்த்தை ☞ 8

## அமைச்சரவை கூட்டுப்பொறுப்பை கேள்விக்குள்ளாக்கியுள்ள ரணில்

### ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

அரசமைப்பின் 22ஆவது திருத்தத்தை வர்த்தமானியில் வெளியிடவேண்டாம் என்று நீதி அமைச்சர் சொல்லியும் மறுநாளே அதனை ஜனாதிபதி வெளியிட்டதன் மூலம் அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பை அவர் கேள்விக்குள்ளாக்கியுள்ளார் என்று ☞ 8

## 22ஆவது திருத்தத்துக்காக ஜனாதிபதி சொல்வது பொய்

### சாடுகின்றார் உதய கம்மன்பில

அரசமைப்பின் 22ஆவது திருத்தத்தைக் கொண்டுவருவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சொல்வதெல்லாம் முழுப்பொய் என்று பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுறு ☞ 2

## ஞானசார தேரர் சொல்லும் புதுக் கதை

இலங்கையில் சுமார் 2000க்கும் மேற்பட்டவர்களைக் காவுகொள்ளக்கூடிய பயங்கரமான தாக்குதல் குறித்து அரேவிய ஷேக் ஒருவர் 2014ம் ஆண்டு எச்சரிக்கைவிடுத்தார் என பொதுபல சேனாவின் பொதுசெயலாளர் ஞானசார தேரர் எச்சரித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

2014 ஜூன் 20 ஷேக் ஒருவர்; பயங்கரவாத தாக்குதல் திட்;டங்கள் குறித்த தகவல்களை எனக்குத் தெரிவித்தார். திக்வெலவிற்கு வந்து தன்னைச் சந்திக்குமாறு அவர் என்னை கேட்டுக்கொண்டார்.

தங்களால் இந்ததாக்குதல் குறித்து தெரிவிக்க முடியாததால் எங்களை அது குறித்து நாட்டிற்கு தெரியப்படுத்துமாறு அவர் கேட்டுக்கொண்டார். தாங்கள் விடயங்களை பகிரங்கப்படுத் ☞ 8

## இனி இது .....

அறிவிக்கப்பட்டது. இந்தஅமைப்பின் பேச்சாளர் நிலாந்தன் அதனைச் செய்தியாளர்கள் முன்பாக அறிவித்தார். பெயர் ஆங்கிலத்திலும் தமிழிலுமாக மாறி மாறி அறிவிக்கப்பட்டது. அமைப்பின் மற்றொரு பேச்சாளரான சுரேஸ் பிரேமச்சந்திரனும் அதனை உறுதிப்படுத்தியிருந்தார்.

இது தொடர்பில் பேச்சாளர் நிலாந்தன்ஜூன்30தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச் சபையும் கலந்துரையாடிஒருஉடன்பாட்டுக்கு வந்திருக்கின்றன. இதன்படி கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச் சபையும் இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படும். அந்தப் பொதுக் கட்டமைப்பு தமிழ்த் தேசியப் பேரவை (TNF - Tamil National Forum) என்று அழைக்கப்படும்.

தமிழ்த் தேசியப் பேரவையின் கூட்டம் ஜூலை 6 நடக்கும். இக்கூட்டத்தில்உத்தியோகபூர்வமாக புரிந்துணர்வு உடன்படிக்கை கட்சிகளுக்கும் பொது மக்கள் சபைக்கும் இடையில் கையெழுத்திடப்படும். அதன்பின்னர் தேவையான உப குழுக்களை உருவாக்கி, ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொது தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெறும்.

அந்த உப கட்டமைப்புக்களில் ஒன்று யார் அந்தத் தமிழ் பொது வேட்பாளர் என்பதைக் கண்டுபிடிக்கும். மற்றொரு உபகுழு அந்த ஜனாதிபதி வேட்பாளரின் தேர்தல் அறிக்கை என்ன என்பதை இறுதி செய்யும். அதற்கூடாகத்தான் பொதுத் தமிழ் வேட்பாளரின் கோரிக்கைகள் முன்வைக்கப்படும்”- என்றார்.

ஆனால், நேற்று இரு தரப்பினராலும்கையெழுத்திடப்பட்ட ஆவணத்தில் புதிய அமைப்பின் பெயர் தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பு என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது. 9 அம்சங்கள் கொண்ட அந்த உடன்படிக்கையின் முதலாவது அம்சமாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் தமிழ் தேசியப்பேரவைஎன்பதற்குப்பதிலாக தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

''தமிழ்த் தேசியக் கட்சிகள், தமிழ் மக்கள் பொதுச் சபை ஆகியவை இவ்வுடன்படிக்கையில் சம தரப்பினர் என்னும் வகையில், இரு தரப்பினரின் இணைவில், உருவாக்கப்படும் இக்கட்டமைப்பு ‘தமிழ்த்தேசியப்பொதுக்கட்டமைப்பு‘ என அழைக்கப்படும்'' என்கிறது அந்த முதல் அம்சம்.

ஏன் இந்தப் பெயர் மாற்றம்? அமைப்பின் பெயர் அறிவிக்கப்பட்டு மூன்று வாரங்களுக்குள் ஏன் இந்த மாற்றம்? அது பற்றி எந்தத் தெளிவுபடுத்தலும் தரப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் அமைப்பின் பெயர் இன்னதுதான் என்கிற தெளிவுபடுத்தல்கூடத் தரப்படவில்லை. உடன்படிக்கையைப் படிப்பவர்கள் பெயர் மாற்றப்பட்டிருக்கின்றது என்று ஊகித்து அறிந்துகொள்ள வேண்டியதுதான்.

பெயரை மாற்றக்கூடாதா, புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன்னரே மாற்றிவிட்டார்கள்தானே என்றெல்லாம் கேட்கலாம். பெயர் மாற்றுவதில் தவறில்லை. அவர்கள் விருப்பப்பட்டால் எப்போது வேண்டுமானாலும் பெயரை மாற்றிக்கொள்ளலாம் அதிலும் விக்கினங்கள் இல்லை. ஆனால், அது பற்றிப் பொறுப்புடன் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமா இல்லையா?

அதிலும், தமிழ் மக்கள் பொதுச் சபை என்கிற பெயரில் கையெழுத்திட்டுள்ள தனிநபர்கள் அனைவரும் தாங்கள் கையெழுத்திட்டுள்ள அரசியல் கட்சிகளை அவற்றின் பொறுப்புக்கூறலற்ற தன்மைக்காக சகட்டுமேனிக்கு விமர்சித்தவர்கள். பேராசிரியர்கணேசலிங்கம்அரசியல் கட்சிகளையும் ஊடகங்களையும் பல்கலைக்கழகத்தில் தனது வகுப்புகளில்கூட தாறுமாறாக விமர்சிப்பவர். ஊடகங்களில் இருப்பவர்கள் படித்துப் பட்டம்பெற்ற அறிவாளிகள் அல்லர், அவர்களுக்குஎதுவும்தெரியாதுஎன்றுதூக்கியெறிந்துகூடப் பேசியிருக்கிறார் என்பதை அவரது மாணவர்களே கூறுகின்றார்கள். அப்படிப்பட்டவரும் இணைந்து அதாவது எல்லாம் தெரிந்தவரும் சேர்ந்து தமது அமைப்பில் செய்த பெயர் மாற்றம் குறித்து மக்களுக்குப் பொறுக் கூறவேண்டும், தெளிவுபடுத்த வேண்டும் என்று அவர்களுக்கும் தோன்றவிலலை.

நச்சு நச்சு... என்று அறப்படிச்ச பல்லி கூழ்பானைக்குள் விழுந்த கதை இதுதான்.

தொடக்கத்திலேயே இப்படி மக்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டியதில்லை, தாம் செய்யும் எது குறித்தும் மக்களுக்குத் தெளிவுபடுத்தத் தேவையில்லை என்று நம்பும், செயற்படும் அமைப்பு, மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக என்ற பெருங்குரலுடன் தமிழர் தேசத்தை ஒருங்கிணைக்கப் போகின்றோம் என்று கூறுவதைக் கேட்கும்போதுதான் நெஞ்சு வலிக்கிறது.

நேற்றைய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றைய 8 விடயங்களும் கீழே தரப்படுகின்றன

2. இவ்வுடன்படிக்கையின் பிரகாரம் உருவாக்கப்படும் 'தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு' எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை. சிறிலங்காவின் அரசுத் தலைவரை தேர்வு செய்வதற்கான தேர்தல் என்ற அடிப்படையில் நிராகரித்து தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தும் தேர்தலாக கையாளும் வகையில் தமிழ்ப் பொதுவேட்பாளரைநிறுத்துவதெனத் தீர்மானித்துள்ளது.

3. தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பானது தமிழ்ப் பொது வேட்பாளரைத் தேர்ந்தெடுத்தல், தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரித்தல், நிதி தொடர்பான விடயங்கள். பரப்புரைகளை முன்னெடுத்தல்போன்ற, அனைத்து அவசியமான செயற்பாடுகளையும் முன்னெடுப்பதற்கும் நிர்வகிப்பதற்குமான, துணைக் குழுக்களை தேவைக்கேற்ப உருவாக்கும் அதிகாரங்களை கொண்டிருக்கும்.

4. தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பால் பொதுவேட்பாளரை

நடவடிக்கைக்காக உருவாக்கப்படும் குறித்த துணைக் குழுக்கள்மற்றும்ஏனையதுணைக் கட்டமைப்புக்கள் அனைத்திலும் தமிழ்த் தேசியக் கட்சிகள். தமிழ் மக்கள் பொதுச் சபை ஆகியவை சமதரப்பாகப் பங்குபற்றும்.

5. தமிழ்ப் பொதுவேட்பாளராக நிறுத்தப்படுபவரும் அவருக்கான தேர்தல் சின்னமும் தமிழ்ப் பொது நிலைப்பாட்டுக்கான ஒரு குறியீடாக மட்டுமே கருதப்படுதல் வேண்டும்.

6. தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பானது பொது வேட்பாளராகத் தெரிந்தெடுக்கப்படுபவருடனும், அவர் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல்கட்சியின் சார்பில் உத்தியோகபூர்வமாக நிறுத்தப்படுகின்றாரோ அந்த நபருடனும் அந்தக் கட்சியுடனும் அவசியமானதும் உகந்ததுமான, உடன்படிக்கையைத்தனித்தனியே நிறைவேற்றிக்கொள்ள வேண்டும்.

7. தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், தமிழ் மக்கள் பொதுச்சபை ஆகிய இரு தரப்பும். ஒரு பொதுக் கட்டமைப்பாக செயற்படுபவர்கள் என்னும் அடிப்படையில் கூட்டுப் பொறுப்புடையவர்கள் என்பதில் இணக்கம் காணப்படுவதுடன்,

வழிகாட்டல் நெறிமுறை ஒன்றை உருவாக்கிக் கொள்வது என்றும் இணக்கம் இதற்கான காணப்படுகின்றது.

8. தமிழ்த்தேசியநிலைப்பாட்டில் உடன்பாடுள்ள ஏனைய கட்சிகள் தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டு, பொதுக்கட்டமைப்புடன் இணைந்து பயணிக்க முன்வரும்போது, அவர்களை உள்வாங்கிக் கொள்வதென்றும் இணக்கம் காணப்படுகின்றது.

9. தமிழ்த் தேசிய இனத்தின் நீண்டகாலஅரசியல்அபிலாசைகளை நிறைவேற்றும் குறிக்கோளுடன் தொடர்ந்து செயற்படுவதென இருதரப்பும் மேலும் இணங்கிக் கொள்கின்றனர்

இந்த 9 புரிந்துணர்வுகள் அடங்கிய உடன்படிக்கையில், தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழ் மக்கள் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்(புளொட்) தமிழ் தேசிய கட்சி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்) தமிழ் தேசிய பசுமை இயக்கம் மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி ஆகிய அரசியல் கட்சிகள் கைச்சாத்திட்டுள்ளன. தமிழ் மக்கள் பொதுச் சபையின் சார்பில் அரசியல் சமூக செயற்பாட்டாளர் வசந்தராஜா, சட்டத்தரணி யோதிலிங்கம், அரசறிவியல்துறை பேராசிரியர் கணேசலிங்கம், அரசியல் சமூக செயற்பாட்டாளர் விக்னேஸ்வரன், அரசியல் விமர்சகர் ஜிதேந்திரா, நிலாந்தன் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர். அரசியல் சமூக செயற்பாட்டாளர் செல்வின் இரேனியஸ் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளபோதும் நேற்றயை நிகழ்வில் அவர் கலந்துகொண்டு கையெழுத்து வைக்கவில்லை என்கிறது வெளியிடப்பட்ட ஆவணத்தின் பிரதி.

இன்று இந்தப் பத்தி நீண்டுவிட்டதால், இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில் ஊன்றிக் கவனிக்கப்படவேண்டிய, தமிழ் மக்களுக்கு எதிர்காலத்தில் பேராபத்தாக முடிந்து விடுமோ என்கிற அச்சத்தைஏற்படுத்தக்கூடியமற்றொரு விடயம் பற்றி நாளை உங்களுடன் பகிர்ந்துகொள்கின்றேன்.

நேற்றைய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## விவசாயிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஜானக தர்மகீர்த்தி இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டார்.. இதன்படி எதிர்காலத்தில் மக்கள் வங்கியுடனும் ஒப்பந்தம்கைச்சாத்திடப்பட உள்ளது.

விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாக முன்னோடித் திட்டங்களை நடைமுறைப்படுத்த தெரிவுசெய்யப்பட்ட 26 பிரதேச செயலகங்களில் விவசாய நவீனமயமாக்கல் நிலையங்கள் ஊடாக வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த தலா 25 மில்லியன் ரூபா வீதம் 650 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக 10 மில்லியன் ரூபா பெறுமதியான விவசாய நவீனமயமாக்கல் திட்டங்களை நடைமுறைப்படுத்த 75 பிரதேச செயலகங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

பிரதேசசெயலகங்களில்விவசாய நவீனமயமாக்கல் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது, குறித்த வேலைத்திட்ட செலவில் 30% இற்கும் அதிகமான பங்களிப்பை விவசாயத் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் விவசாயிகள் வழங்குவதுடன், மீதமுள்ள 70% ஆளும் தரப்பின் பங்களிப்பாகவும் உள்ளது.

சுழற்சிமுறைக் கடன் திட்டமாக செயல்படுத்தும் வகையில், அரசு வழங்கிய பங்களிப்பை விவசாய நவீனமயமாக்கல் கடன் திட்டத்தின் கீழ்வட்டியில்லாக்கடனாக, இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகிய மூன்று அரச வங்கிகளில் இருந்து பயனாளிகள் தேர்ந்தெடுக்கும் வங்கி மூலம் திரும்பப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில், பொறிமுறை ஒன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

அதன்படி, இலங்கை வங்கியின் தலைமையகத்தில் விவசாயம் மற்றும் பெருந்தோட்ட அமைச்சின் செயலாளரின் பெயரில் உள்ள கணக்கில் வைப்பு செய்யப்பட்ட நிதியத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகிய மூன்று வங்கிகளில்பயனாளிதேர்ந்தெடுத்த வங்கியின் மூலம் விவசாய தொழில் முயற்சியாளர்களுக்கு வட்டியில்லாக் கடனாக இந்தப் பணம் வழங்கப்படுகிறது.

கடன் சலுகைக் காலம் அதிகபட்சம் 6 மாதங்கள் ஆகும். கடன் சலுகைக் காலம் உட்பட கடன் தொகையை திருப்பிச் செலுத்த வேண்டிய அதிகபட்ச காலம் 5 வருடங்கள் ஆகும். மேலும், விவசாயிகள் அல்லது விவசாயதொழில்முயற்சியாளர்கள் பெற்றுக்கொள்ளும் கடன் தொகை மற்றும்வேலைத்திட்டத்தின்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில், கடன் சலுகைக் காலம் மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம் ஆகியவை விவசாய நவீனமயமாக்கல் மையங்களால் தீர்மானிக்கப்படுகின்றன.

இந்த வட்டியில்லாக் கடன் திட்டம்தொடர்பில்கருத்துதெரிவித்த விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஜானக தர்மகீர்த்தி ”நாம் இப்போதேனும், உற்பத்தி சார்ந்த திட்டங்களுக்கு மாறுவது அவசியம். இந்த ஒப்பந்தத்தின் மூலம், உற்பத்தி திறன் கொண்ட தரப்பினரைக் கண்டறிந்து, அவர்களை ஊக்குவித்து, தேவையானவசதிகளைஏற்படுத்தி, எதிர்காலத்தில் உற்பத்தியை அதிகரிக்கும் வேலைத்திட்டத்திற்கு மாறுவதற்கு முயற்சித்து வருகிறோம்.

இதுவரை மக்களுக்கு உதவிகளைவழங்கி, உற்பத்தியை அதிகரிக்க முயற்சி செய்தோம். ஆனால் எங்களால் அந்த இலக்கை அடைய முடியவில்லை. உற்பத்தியை அதிகரித்தால் மாத்திரமே வெற்றி சாத்தியமாகும். விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் மூலம் பெரும் சாதனைகளை எட்டுவோம் என நம்புகிறோம். இந்தத் திட்டம் நீண்ட காலத்திற்குத் தேவையான இலக்குகளை அடைய மிகவும் முக்கியமானதாகஇருக்கும். எனவே, ஓர் அமைச்சு என்ற ரீதியில் நாம் இந்த வேலைத்திட்டத்திற்கு எமது அதிகபட்ச பங்களிப்பை வழங்கி வருகின்றோம்.” என்றார்.

பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர். எச். எஸ். சமரதுங்கதனதுரையில், ”ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு வரவு செலவுத் திட்டங்களிலும் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்று கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தம் அதன் எதிர்காலத்திற்கான மிக முக்கியமான படியாகும்.

இதுவரை பயன்படுத்தப்படாத நிலத்தை தேசிய தொழில்முனைவோருக்கு வழங்குவதும், அந்த நிலங்களில் இருந்து ஒட்டுமொத்தமாக ஏற்றுமதி விவசாயத்தை உருவாக்குவதும், தேசிய தொழில்முனைவோர்மூலம்வர்த்தக விவசாயத்தை உருவாக்குவதும் இந்த நோக்கங்களில் ஒன்றாகும்” என்றார்.

## 22ஆவது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹெலஉறுமயகட்சிகாரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் இடம் பெறும் என்று நாட்டு மக்கள் எதிர்பார்த்துள்ள நிலையில் மக்களை குழப்பத்துக்குள் தள்ளும் வகையில் அரசமைப்பின் 22ஆவது திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசமைப்பின் 19ஆவது திருத்தம் உருவாக்கப்படும்போது அதன் 83(ஆ) உறுப்புரையை திருத்தம் செய்ய மறந்து விட்டோம். ஆகவே மன்னித்து விடுங்கள் என்று குறிப்பிட்டுக்கொண்டு 22 ஆவது திருத்தத்தை ஜனாதிபதி கொண்டு வந்துள்ளார்.

22ஆவது திருத்தம் பற்றி ஜனாதிபதி குறிப்பிடுவது முற்றிலும் பொய்யானது. ஜனாதிபதியின் பதவி காலம் தொடர்பில் அரசமைப்பின் 30(2) உறுப்புரை திருத்தப்பட்டு, 6 வருட பதவி காலம் ஐந்து வருடங்களாக குறைக்கப்பட்டது. ஆகவே 83(ஆ) உறுப்புரையில் ஆறு வருடங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதை திருத்தம் செய்தாலும், செய்யாவிடினும் எவ்வித பயனும் கிடைக்காது. அதனால் ஜனாதிபதித் தேர்தலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது இதனை உயர்நீதிமன்றம் பலமுறை உறுதிப்படுத்தியுள்ளது.

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் 83(ஆ) உறுப்புரையை திருத்தம் செய்ய முடியாமல் போனது என்று குறிப்பிடுவதை ஏற்கமுடியாது. அந்த உறுப்புரையை திருத்தம் செய்ய நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மக்கள் வாக்கெடுப்புக்கும் செல்ல வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதால் அவ்விடயம் குறித்து அவதானம் செலுத்தவில்லை.

தேசிய கீதம், தேசியக் கொடி, உட்பட நாட்டின் ஒருமைப்பாடு உள்ளிட்ட விடயங்களில் மாற்றம் ஏற்படுத்த வேண்டுமாயின் சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லவேண்டும்.

சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லாமல் 22ஆவது திருத்தத்தை எளிய பெரும்பான்மையுடன் நிறைவேற்ற ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. மக்கள் வாக்கெடுப்புடன் 22ஆவது திருத்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற தீரப்பினை பெறுவதற்காக இந்த சட்டமூலத்தை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவோம்.

அதேபோல்இந்தசட்டமூலத்துக்கு நாடாளுமன்றத்தில்மூன்றில்இரண்டு பெரும்பான்மை கிடைப்பதையும் இல்லாதொழிப்போம். மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற 150 உறுப்பினர்கள் வாக்களிக்கவேண்டும். ஆளும்தரப்பிடம் பெரும்பான்மை கிடையாது. நாட்டுப்பற்று உள்ளவர்கள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளவேண்டும் - என்றார்.

## 16,000....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொவிட் தொற்று மற்றும் நாட்டில் ஏற்பட்ட போராட்டத்துடன், இந்த நாட்டில் உள்ள ஏனைய எல்லா துறைகளைப் போலவே, கல்வித் துறையும் பாரிய நெருக்கடியை சந்தித்தது. வீழ்ந்த நாட்டை மீட்கும் பொறுப்பை வேறு யாரும் பொறுப்பேற்காத நிலையில், ரணில் விக்ரமசிங்கதலைமையிலானஎமது ஆளும்தரப்பு அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது.

அப்போது காணப்பட்ட நிலைமையை மாற்றி இரண்டு

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# சவால்களை எதிர்கொள்வதற்கான தலைமைத்துவத்தை தெரிவுசெய்ய மக்கள் சரியான முடிவெடுக்கவேண்டும்

## ஆஸியின் முன்னாள் நிதி அமைச்சர் ஸ்கொட் மொரிசன் தெரிவிப்பு



பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் கடந்த இரண்டு வருடங்களில் இலங்கையில் ஸ்திரத்தன்மையை மீண்டும் கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் உண்மையிலேயே அசாதாரணமானவை. இது போன்ற எதிர்கால சவால்களை இனிவரும் காலங்களிலும் எதிர்கொள்வதற்கானதலைமைத்துவத்தைத்தெரிவுசெய்வதற்கு எதிர்வரும் மாதங்களில் மக்கள் சரியான தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்று ஆஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமரும் நிதி அமைச்சருமான ஸ்கொட் மொரிசன் தெரிவித்தார்.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

கடந்த காலங்களில் நான் சில சந்தர்ப்பங்களில் இங்கு வந்திருக்கிறேன். அந்த காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவ்வாறு சில ஆண்டுகளுக்கு முன்னர் திருகோணமலை துறைமுகத்துக்கு விஜயம் செய்திருந்த போது அது உலகிலேயே சிறந்த துறைமுகம் எனத் தெரிவிக்கப்பட்டது.

நான் இலங்கைக்கு வந்ததற்கு மற்றுமொரு காரணம் இலங்கையர்களுடனான ஒற்றுமையை வலுப்படுத்துவதற்காகவாகும். இலங்கையர்கள் ஆஸ்திரேலியாவின் சிறந்த நண்பர்களாவர். இலங்கைக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையில் அற்புதமான மக்கள் உறவுமுறை உள்ளது. அது உண்மையானதும் கூட. இலங்கை மீது எமக்கு பாரிய நம்பிக்கை உள்ளது.

அனைத்து இலங்கையர்களையும் நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால் வரும் மாதங்களில் நீங்கள் மிக முக்கியமான தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளது. இந்தக் கோரிக்கையை மக்கள் முடிவுகளை எடுப்பதில் ஆஸ்திரேலியா தலையிடுவதாக எண்ணி விடக்கூடாது. இலங்கை சிறந்த ஜனநாயக நாடு என்பதை எண்ணி அனைவரும் பெருமை கொள்ள வேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் கடந்த இரண்டு வருடங்களில் இலங்கையில் ஸ்திரத்தன்மையை மீண்டும் கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் உண்மையிலேயே அசாதாரணமானவை. எனினும் அவை தைரியத்துடன் முன்னெடுக்கப்படுகின்றன. இது இலங்கை மக்களின் பெரும் தியாகங்களையும், ஜனாதிபதியின் துணிச்சலான முடிவெடுக்கும் திறனையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது.

நாட்டுக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமை வகித்தமைக்கு அவருக்கு நன்றி கூறுகின்றேன். இலங்கை இன்னும் பல சாதனைகளை செய்யும். ஆனால் அதைச் செய்ய, வலுவான பொருளாதாரம் தேவை. நிலையான ஜனநாயகம் தேவை. ஆஸ்திரேலியா போன்ற நண்பர்கள் மற்றும் பங்காளிகளுடன் இலங்கை நெருக்கமாக இருக்க வேண்டும். - என்றார்.(05)

# இந்த வருடத்தில் இதுவரைக்கும் 10 லட்சம் சுற்றுலாவிகள் வருகை



இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூலை மாதம் 18 ஆம் திகதி வரை நாட்டிற்கு 10 லட்சத்து 19 ஆயிரத்த 642 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர்.

அதன்படி, ஜூலை மாதம் முதல் வாரத்தில் 43 ஆயிரத்து 83 பேரும், இரண்டாம் வாராத்தில் 42 ஆயிரத்து 343 பேரும், மூன்றாவது வாரத்தின் முதல் நான்கு நாள்களில் 23 ஆயிரத்து 967 பேரும் வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைவெளியிட்டுள்ள தரவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜூலை மாதம் மூன்றாவது வாரத்தின் முதல் நான்கு நாள்களில் 23 ஆயிரத்து 967 பேர் வருகை தந்துள்ளனர்.

ஜூலை 18 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 27 ஆயிரத்து 574 இந்திய சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இது நாட்டிற்கு வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 25.2 சதவீதம் ஆகும்.

பிரித்தானியா, சீனா, ஜேர்மனி மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்தும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.(05)

# மித்தெனியவில் துப்பாக்கிசூடு : கணவன், மனைவி படுகாயம்

அம்பாந்தோட்டை, மித்தெனிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்பொத்தயாய - ஜூலம்பிட்டிய வீதியில் 6 ஆவது மைல்கல் அருகில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த கணவன், மனைவி மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மித்தெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற கணவர் படுகாயமடைந்துள்ள நிலையில், மோட்டார் சைக்கிள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் பின்புறத்தில் அமர்ந்திருந்த மனைவியும் காயமடைந்துள்ளார்; எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் மித்தெனிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

ஜூலம்பிட்டிய பகுதியில் வசிக்கும் 42 வயதுடைய கணவரும் 40 வயதுடைய மனைவியுமே காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் தங்களது கடையைப் பூட்டி விட்டு வீடு நோக்கி சென்றுகொண்டிருக்கும் போது இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துப்பாக்கி தாரிகள் இந்த துப்பாக்கி பிரயோகத்துக்காகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் துப்பாக்கியைச் சம்பவ இடத்திலேயே வைத்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனத் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மித்தெனிய பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.(05)

# ரூ. 124 மில்லியன் செலவில் கிழக்கு மாகாணத்தின் பெரும் இயன் மருத்துவ சிகிச்சைப் பிரிவு திறப்பு

## நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில்



(கே எ ஹமீட்)

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் 124 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தின் பாரிய இயன் மருத்துவ சிகிச்சை கட்டடத் தொகுதி ஞாயிற்றுக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

முன்னாள் சுகாதார இராஜாங்க அமைச்சரும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பைசால் காசிமின் முயற்சியின் பலனாக சுகாதார அமைச்சால் 124 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தின் பாரிய இயன் மருத்துவ சிகிச்சை கட்டடத் தொகுதி இதுவாகும்.

இந் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமின் அழைப்பின் பேரில், பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் அத்தியட்சகர் மற்றும் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இச் சிகிச்சை நிலையத்தின் மூலமாக நாளொன்றுக்கு ஐம்பதிற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு அனைத்துவிதமான இயன் மருத்துவ சிகிச்சைகளையும் வழங்க முடிவதோடு, பின்வரும் சிகிச்சைகளுக்கான விசேட கட்டமைப்புக்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

- Stroke Rehabilitation (Neurological Physiotherapy)

'பக்கவாத இயன் மருத்துவ சிகிச்சை'

- Orthopedic Physiotherapy

'எலும்பியல் இயன் மருத்துவ சிகிச்சை'

- Sports Physiotherapy and Rehabilitation

'விளையாட்டு வீர, வீராங்கனைகளுக்கான இயன் மருத்துவ சிகிச்சை'

- Geriatric Physiotherapy

'முதியோர்களுக்கான இயன் மருத்துவ சிகிச்சை'

- Pediatric Physiotherapy

'சிறுவர்களுக்கான இயன் மருத்துவ சிகிச்சை'

மேலும், கிழக்கு மாகாணத்தில் அரிதாக காணப்படும் இயன் மருத்துவ சிகிச்சைக்காக பயன்படுத்தப்படும் அதிநவீன உபகரணங்களையும் இந்நிலையம் கொண்டுள்ளமை விஷேட அம்சமாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமுக்கு மக்கள் வழங்கிய அதிகாரமும், நாடாளுமன்ற உறுப்பினரின் அயராத முயற்சியுமே, கிழக்கு மாகாணத்தின் வரலாறு காணாத இப் பாரிய இயன் மருத்துவ சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையம் நிர்மாணிக்கப்ப டுவதற்கும், குறித்த நிலையம் மூலம் ஏழை, எளிய மக்களும் விஷேடமாக விளையாட்டு வீரர்களும் நோய் நிலைமைகளில் இருந்து புனர்வாழ்வு பெறவுள்ளதற்கும் காரணம் என்பதை அனைவரும் உணர வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும். (05)



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## சிறந்த முன்னுதாரணம்

அமெரிக்க அரசுத் தலைவருக்கான போட்டியில் இருந்து ஜோ பைடன் திடீரென விலகியிருக்கிறார் என்று அறிவித்துள்ளார். முதுமையினால் ஏற்படும் மறதி மற்றும் செயற்றினின்மையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள பைடன் தொடர்ச்சியாக விமர்சனங்களைச் சந்தித்து வரும் நிலையில் தேர்தலுக்கு மிக நெருக்கமாக வந்த பின்னர் போட்டியில் இருந்து விலகியிருக்கிறார்.

தனது கட்சி மற்றும் நாட்டு நலன் என்பன தனது இந்த முடிவுக்குக் காரணம் என்று பைடன் தெரிவித்திருக்கின்றார். ”உங்கள் அரசுத் தலைவராகப் பணியாற்றுவது எனது வாழ்நாளின் மிகப் பெரிய கௌரவம். மீண்டும் தேர்தலில் போட்டியிடுவது எனது நோக்கமாக இருந்தாலும் கட்சி மற்றும் நாட்டின் நலன் கருதி எதிர்வரும் அரசுத் தலைவர் தேர்தலில் இருந்து விலக முடிவு செய்துள்ளேன். எஞ்சியிருக்கும் எனது பதவிக் காலத்திற்கான பொறுப்புக்களை நிறைவேற்ற முடியும் என்று நம்புகின்றேன்” என்று தனது அறிவிப்பில் குறிப்பிட்டிருக்கிறார் பைடன்.

தேர்தலுக்கு இவ்வளவு நெருக்கமாக வந்து ஒருவர் போட்டியிலிருந்து விலகுவது என்பது கவனத்திற்குரியது. இருந்தாலும் கடந்த சில வருடங்களாகவே பைடனின் ஞாபகத் திறன் பெரும்பாலும் மிக மோசமாக அமைந்திருக்கின்றது. அவரது மறதி அல்லது நினைவாற்றல் திறன் அமெரிக்காவை உலக அரங்கிலேயே சந்தி சிரிக்க வைத்திருக்கின்றது. இதற்காக உள்நாட்டில் கடுமையான விமர்சனங்களை பைடன் எதிர்கொள்ள வேண்டியிருந்திருக்கின்றது.

அவர் அவ்வப்போது தவறான பெயர்களை உச்சரித்தார். அரசுத் தலைவர் தேர்தலின் முன்பாக வேட்பாளர்களுக்கு இடையே நடக்கும் அரசியல் விவாதத்தில் அவரது போட்டியாளரான டொனால்ட் ட்ரம்புக்கு ஈடுகொடுத்த அவரால் விவாதம் செய்ய முடியவில்லை. திணறினார். இதுவும் அவர் மீதான விமர்சனங்கள் தீவிரமடையக் காரணமாகின. இதே ட்ரம்பைத் தோற்கடித்துத்தான் பைடன் கடந்த தடவை வெற்றி பெற்றிருந்தார். அமெரிக்க மக்களின் பாரம்பரியப்படி ஒரு அரசுத் தலைவருக்கு அவர்கள் இரண்டு தடவைகள் பதவிக் காலத்தை வழங்குவதே வழக்கம். அதனால் பைடனுக்கும் அதற்கான வாய்ப்புக்கள் இருந்தன. எனினும் பொதுவெளியில் அவரது விம்பத்தை சுக்குநூறாக்கிய அவரது நினைவாற்றல் திறன் கடுமையாக விமர்சிக்கப்பட்டதன் விளைவு ட்ரம் மீண்டும் அதிபராகிவிடுவாரோ என்கிற அச்சத்தை ஏற்படுத்தி பைடனை வெளியேற வைத்திருக்கின்றது.

போட்டியில் இருந்து பைடன் கடைசி நேரத்தில் வெளியேறியிருப்பதும் கடும் விமர்சனங்களை எழுப்பியுள்ளது என்றபோதும் பொதுவெளியில் எழும் விமர்சனங்களுக்கும் மக்களின் கட்சியினரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து, அதனை ஏற்றுக்கொண்டு பைடன் போட்டியில் இருந்து விலகியிருப்பதும் தனக்கு இளையவரும் தனது துணை அரசுத் தலைவருமான கமலா ஹரிஸை அடுத்த வேட்பாளராக முன்மொழிந்திருப்பதும் அவர் மக்களாட்சித் தத்துவத்திற்குச் செய்த பெரும் மான்பு. இந்தப் பண்பு, அதாவது மக்களிடம் இருந்து எழும் விமர்சனங்களுக்கு மதிப்பளித்து நடக்கும் பண்பு அரசியலாளர்களிடம் வளர்ந்துவிட்டால் அங்கு மக்களாட்சி செழித்தோங்கும். அந்த வகையில் பைடன் மிகச் சிறந்த முன்னுதாரத்தை ஏற்படுத்தியிருக்கிறார்.

இதுபோன்று விமர்சனங்களுக்கும் மக்கள் கருத்துக்களுக்கும் மதிப்பளித்து நடக்கும் பண்பு இலங்கை அரசியலாளர்களிடத்தில் குறிப்பாக தமிழ் அரசியலாளர்களிடத்தில் இல்லை என்பது வருத்தத்துக்குரியது. மக்களாட்சியைப் பயில்வதற்கு நாம் இன்னும் நீண்டதூரம் பயணப்படவேண்டியிருக்கின்றது என்பதை இது உணர்த்தி நிற்கின்றது.

# போர் தின்னும் குழந்தைகள்



**நாகராஜன்**

உலகெங்கும் போர் சூழ்ந்த பகுதிகளில் வாழும் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில், 45 லட்சம் குழந்தைகள் உணவு பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், 2 கோடிக்கும் அதிகமான குழந்தைகள் கல்வி வசதியின்றி உள்ளனர் என்றும் ஓர் அறிக்கை கூறுகிறது.

காசாவில் உள்ள குழந்தைகள், போரால் பலவிதமான ஆபத்துகளைச் சந்திக்கின்றனர். காசாவின் ராஃபா பகுதியில் ஏறக்குறைய 6 லட்சம் குழந்தைகள் ஆபத்தில் இருப்பதாக யுனிசெஃப் அமைப்பு தெரிவிக்கிறது.

அவர்களுக்கு உடல்ரீதியான பாதகங்களை ஏற்படுத்துவதோடு, தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தி தற்கொலைக்கும் காரணமாக அமையலாம் என்கிறார்கள் ஆய்வாளர்கள். மேலும், வன்முறையைப் பார்க்கும் குழந்தைகளுக்கு வன்முறை மீதான ஈர்ப்பு அதிகமாகலாம். அதனால், அந்தக் குழந்தைகளின் கவனம் பிற்காலத்தில் வன்முறையின்பால் கொண்டுசெல்லும் அல்லது வன்முறையைக் கண்டு பயந்துவிடுவர். சண்டை வரும் சூழல் வந்தாலே அதை எதிர்கொள்ளத் துணிச்சலின்றி ஓடி ஒளியும் எண்ணம் முளைத்துவிடும்.

பிஞ்சு வயதில் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளானால், வளரும்போது எதிர் பாலினத்தின் மேல் பயம் உண்டாகும் வாய்ப்புகள் அதிகம். கடத்தல்,



உக்ரைனில் கடந்த 2 ஆண்டுகளாக நடக்கும் போரில் ஏறக்குறைய 600 உக்ரைன் குழந்தைகள் இறந்துள்ளனர் எனவும், 18 லட்சத்துக்கும் அதிகமான குழந்தைகள் மனநலப் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர் எனவும் ஒரு புள்ளிவிவரம் கூறுகிறது. ஈக்குவடோரில் பாதுகாப்பு நிலைகளைக் காரணம் காட்டி, நாடு முழுவதும் கல்வி நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதால், 43 லட்சத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஐ.நா. புள்ளிவிவரம் கூறுகிறது.

கடந்த 2 மாதங்களில் மொசாம்பிக்கில் கபோ டெல் கடோ பகுதியில் 61,000-க்கும் அதிகமான குழந்தைகள் தங்கள் வீடுகளிலிருந்து கட்டாயமாக வெளியேற வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மியான்மரில் கடந்த 2021-இல் ஆட்சிக் கவிழ்ப்பு ஏற்பட்டது முதல் 60 லட்சம் குழந்தைகள் போதிய சத்துணவின்றி வாடுகின்றனர் என்று ஐ.நா. தெரிவித்துள்ளது. சமீப காலத்தில் சிரியாவில் கொல்லப்பட்ட ஒரு லட்சம் பேரில், குழந்தைகளின் எண்ணிக்கை 10,000.

ஐ.நா. குழந்தைகள் நிதியத்தின் (யுனிசெஃப்) கூற்றுப்படி, கடந்த 10 ஆண்டுகளில் 20 லட்சம் குழந்தைகள் கொல்லப்பட்டனர்; 4.5 கோடி குழந்தைகள் உடல் உறுப்புகளை இழந்தனர்; 1.2 கோடி குழந்தைகள் வீட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்; 10 லட்சத்துக்கும் அதிகமான குழந்தைகள் அனாதைகள் ஆயினர் அல்லது பெற்றோரிடமிருந்து பிரிந்துள்ளனர். மேலும், அதிர்ச்சியால் 1 கோடி குழந்தைகள் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

குழந்தைகள் மீதான அடக்குமுறைகள் உடலைக் காயப்படுத்துதல், பாலியல் தொல்லைகள் என்று பலவும் நடக்க சாத்தியங்கள் உண்டு.

மனித மூளையின் வளர்ச்சிக்கு குழந்தைப் பருவம் மிக முக்கியமானது. ஒருவருக்கு உணர்ச்சி திறன், மொழி மற்றும் அறிவாற்றல் செயல்பாடுகள் குழந்தைப் பருவத்திலேயே தொடங்கிவிடுகின்றன. குழந்தைகளின் சிந்தனையை சுற்றுச்சூழல் மாற்றிவிடும்.

அந்த வகையில், ஆயுத மோதல் பகுதிகளில் உள்ள குழந்தைகள், பதற்றம் மற்றும் மனச்சோர்வு போன்ற மனநலப் பிரச்னைகளுக்கும், நோய் எதிர்ப்பு மண்டலம் மற்றும் மத்திய நரம்பு மண்டலங்களில் உள்ள உடலியல் பிரச்னைகளுக்கும் அதிகமாக எளிதில் உட்படலாம்.

குழந்தைகளை அதிகமாகப் பாதிக்கும் போர்களை உடனடியாக நிறுத்துவதற்கு அரசுகளும், பன்னாட்டு அமைப்புகளும் முன்வர வேண்டும். குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளித்தல் அவசியம்.

குழந்தைகள் நலனில் ஆட்சியாளர்கள் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும். அவர்களை பெண்கள் மற்றும் குழந்தைகள் என்று இணைத்து வைத்துள்ளனர். குழந்தை உரிமைகளுக்காக தனி அமைச்சகத்தை நிறுவ உறுதியளிக்க வேண்டும். குழந்தை மற்றும் குடும்பத்தை மையமாகக் கொண்ட சமூகத்திற்கான பார்வையை உருவாக்க இது உதவும்.

குழந்தைகளை ஆனந்தமாக இருக்க விடுங்கள். ஒரு குழந்தை புன்னகைக்க மறந்துவிடுவதைவிட ஆபத்தானது ஏதுமில்லை.

# இளம் கல்வி அதிகாரி தாஜுன் நிஷா இறப்பு



(எச்.எம்.எம்.பர்ஸான்)

ஓட்டமாவடி - மாஞ்சோலை பகுதியைச்சேர்ந்த இளம்கல்வி அதிகாரி ஜிப்ரி தாஜுன் நிஷா வெள்ளிக்கிழமை மரணமடைந்துள்ளார்.

இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரியான இவர் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்வி அலுவலகத்தில் திட்டமிடல் பிரிவுக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராகபணிபுரிந்துவந்துள்ளார்.

35 வயதுடைய இவர், சிறிது காலம் இருதய நோய் காரணமாக சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இவ்வாறு சிகிச்சை பெற்று வந்த இவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் மரணமடைந்துள்ளார்.

ஒரு ஆண் குழந்தையின் தாயான இவரின் ஜனாஸா சனிக்கிழமை ஓட்டமாவடி முகைதீன் பெரிய ஜும்ஆப் பள்ளிவாசல்மையவாடியில்நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஜனாஸா நல்லடக்கத்தில் கல்வி அதிகாரிகள்,பாடசாலைகளின்அதிபர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் என பெருந்திரளானோர்கலந்துகொண்டனர். (05)

# மாணவர் கற்றலுக்கான உதவிகளை வழங்கி வைத்தார் குகதாஸன் எம்.பி.

அம்பாந்தோட்டை,திஸ்ஸமஹாராமகாவந்திஸ்ஸ புர பகுதியில் நீர் நிரம்பிய கற்குழிக்குள் மூழ்கி தாய் மற்றும் இரண்டு பிள்ளைகள் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தாயும்இரண்டுபிள்ளைகளும்ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நீராடச் சென்ற போது இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

32 வயதுடைய தாய், 14 வயது மற்றும் 9 வயதுடைய இரண்டு சிறுவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

தாயின் சடலம் ஞாயிறு இரவு கண்டெடுக்கப் பட்டதோடு, இரு பிள்ளைகளின் சடலங்களை தேடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(05)

# கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை ஏற்பாட்டில்: உலக குருதி கொடையாளர் தினம்





(எஸ்.அஷ்ரப்கான்)

உலககுருதிகொடையாளர்தினத்தைசிறப்பிக்கும் வகையில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் ஏற்பாட்டில் குருதிக்கொடை வழங்கியவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் இடம்பெற்றது.



கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் ஏ.எல்.எப். ரஹ்மானின் வழிகாட்டலில் இடம் பெற்ற இந்நிகழ் விற்கு பிரதம அதிதியாக, கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் பொதுச் சுகாதாரம் மற்றும் திட்டமிடலுக்கு பொறுப்பான சிரேஷ்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.பாறூக் கலந்து கொண்டதுடன் குருதிக்கொடை ஏற்பாட்டாளர்கள் சார்பில் கௌரவ அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளரும் மயோன் குரூப் நிறுவனத்தின் பணிப்பாளருமான றிஸ்லி முஸ்தபா ஆகியோரும் வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதியர்கள், குருதி நன்கொடையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு குருதி கொடையாளர்கள் பலர் அதிதி களால் பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.(05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# கதிர்காம தங்க நுழைவாயிலை மஹிந்த நேற்று திறந்து வைப்பு



( வி.ரி. சகாதேவராஜா)

கதிர்காமத்தில்மாணிக்ககங்கைநதி தீரத்திலே அழகாக நிர்மாணிக்கப்பட்ட தங்க நுழைவாயில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்பட்டது.

தங்கநுழைவாயில்படிக்கட்டுகளில் கண் கவர் கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

வரலாற்றில்முதல்தடவையாகபல லட்சம்ரூபாசெலவில்நிர்மாணிக்கப்பட்ட தங்கநுழைவாயில் ஊடாகச் சென்று நேற்று ( திங்கட்கிழமை) காலை தீர்த்தோற்சவம் இடம்பெற்றது.

இதற்காக லட்சோப லட்சம் மக்கள் அங்கு ஒன்று கூடியிருந்தனர். மக்கள் வெள்ளம் அங்கு அலை மோதுகிறது.

கதிர்காம தேவாலய நிலமேதிஷான்குணசேகர தலைமையில் இம்முதல் நிகழ்வு நடைபெற்றது.

மிகவும் அழகாக நிர்மாணிக் கப்பட்டுள்ள இந்த நுழைவாயிலூடாக யானைகள் சகிதம் பேழை எடுத்து செல்லப்பட்டு நீர் வெட்டு (தீர்த்தோற்சவம்) இடம்பெற்றது.(05)





# நற்பிட்டிமுனையில் இலவச மருத்துவ முகாம்



(பாறுக் ஷிஹான்)

நற்பிட்டிமுனை சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றிய சுகாதார பிரிவு ஏற்பாடு செய்த இலவச மருத்துவ முகாம் நற்பிட்டிமுனை அல்-அக்ஸா மத்திய மகா வித்தியாலய அஹமட் மண்டப கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.



நற்பிட்டிமுனை சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றியத்தின் தலைவர் ஐ.எல்.ஏ.குத்தூஸ் தலைமையில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாமில் தொற்றா நோய்களான நீரிழிவு, புற்றுநோய், மாரடைப்பு, உயர் குருதியமுக்கம் போன்ற நோய்களுக்கான பரிசோதனைகள் இடம்பெற்றன.

இன்று எமது சமூகத்தில் தொற்றா நோய்களான நீரிழிவு, புற்றுநோய் மாரடைப்பு, உயர்குருதியமுக்கம் போன்றன இளம் வயதிலேயே பொதுமக்களை கொல்லும் நோய்களாக காணப்படுகின்றன. ஆகவே ஆரம்பத்திலேயே இந்நோய்களை கண்டுபிடிப்பதன் மூலமாக இந்த நோய்களின் அகோர தன்மையை சமூகத்தில் களையக் கூடியதாக இருக்கும்.

அதன்அடிப்படையில் இதன் போது இலவச மருத்துவ முகாமில் இரத்தத்தில் சீனி , இரத்த அழுத்த பரிசோதனை, உடல் நிறை குறியீட்டெண் மற்றும் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன் வைத்தியஅதிகாரிகளான டாக்டர் எஸ்.அஜ்மல் இம்தியாஸ், டாக்டர் எம்.ஏ.பயாஸ், சுகாதாரப் பிரிவின் பொது சுகாதார பரிசோதகர் எம்.நிஜாமுதின் அத்துடன் குடும்ப சுகாதார உத்தியகத்தர்களான ரி.எஸ்.சாஹிரா எஸ்.ஜீவானந்தி ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது

இலவச மருத்துவ முகாமில் பிரதேசத்திலுள்ள பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

## 16,000....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருடங்களுக்குள் நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டுவர ஆளும்தரப்புச் செயற்பட்டது. எனவே, இந்த நேரத்தில், நாட்டின் அன்றைய நிலையையும், இன்றைய நிலையையும் நினைவு கூரவேண்டிய தேவை உள்ளது.

அத்துடன், இலங்கையில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு 2025ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடைகளை 100 வீதம் வழங்குவதாக சீன ஆளும்தரப்பு அமைச்சுக்கு உறுதிப்படுத்தியுள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான பாடசாலை பாடப் புத்தகங்களை பிரதேச களஞ்சியங்களுக்கு விநியோகிக்கும் பணிகள் நாளை முதல் ஆரம்பிக்கப்படும். பிரதான மற்றும் தேசிய பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய அனைத்து பாடசாலைகளுக்கும் மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்துள்ளோம். இதன் மூலம் 17 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுகின்றனர்.

பல்கலைக்கழகங்களில் வெளிநாட்டு உதவியின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு கடந்த காலத்தில் நிறுத்தப்பட்ட அபிவிருத்தி பணிகளும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது பல்கலைக்கழக கட்டமைப்புக்கும் நிர்மாணத் துறைக்கும் மிகவும் முக்கியமானது என்பதைக் கூற வேண்டும்.

கல்வித்துறையில் ஆசிரியர் தொழில்சார் பிரச்சினைகள் தொடர்பான இரண்டு பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்க நாங்கள் செயற்பட்டு வருகிறோம். அதன் கீழ், ஆசிரியர்களின் தொழில் சார்ந்த பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்து, தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும். அதன் மூலம் சம்பள உயர்வை தாமதமின்றி வழங்க முடியும். அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பிரகாரம், எதிர்வரும் புதன்கிழமைக்குள், உரிய உத்தரவுக் கடிதங்கள் அமைச்சுக்கு கிடைத்த பின்னர், மாகாண அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்படும்.

அத்துடன், இந்தக் காலப்பகுதியில் தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் சுமார் 16,000 ஆசிரியர் நியமனங்களை வழங்க ஏற்பாடு செய்தோம். பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள நிலையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி, ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வுகளை வழங்குவதில் வெற்றிபெற்றுள்ளோம்.

2700 திறன் பலகைகளை, பாடசாலைகளுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, முழுமையான பாடசாலை வலயமைப்பையும் டிஜிட்டல் மயமாக்குவதே எமது திட்டமாகும். மேலும், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க 400 மில்லியன் டொலர்களை வழங்க திட்டமிட்டுள்ளது என்றார்.

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விநியோகிக்க 8,000 தொழிலாளர்கள் நியமிக் கப்பட்டுள்ளார்கள்.

தபால் வாக்குகள் தொடர்பான அனைத்து ஆவணங் களையும் பாதுகாப்பான முறையில் பரிமாற்றுவதற்கு தபால் திணைக் களங்கள் கடமைப் பட்டுள்ளன - என்றார்.

## எசல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேரின் அனுசாசனைக்கு அமைய சிங்கராஜா ஹஸ்திராஜா யானையின் மீது புனித கலசம், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மற்றும் சாகல ரத்நாயக்க ஆகியோரின் தலைமையில் வைக்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷ, கதிர்காமம் மஹா தேவாலய பஸ்நாயக்க நிலமே டிஷான் குணசேகர மற்றும் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துவ தற்காகவே, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு இலங்கை வரவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் செய்தியாளர்களிடம் பேசிய இராஜாங்க அமைச்சர் தெரிவித்ததாவது:

பொருளாதார முன்னேற்றத்தை பாதிக்காத வகையில் எதிர்வரும் தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாவது மீளாய்வுக்குத் தயாராக வேண்டியுள்ளது. எனினும் இம்முறை இடம்பெறுவது மூன்றாவது மீளாய்வுக்கான தூதுக் குழுவின் பேச்சல்ல.

நாட்டின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் பேச்சு நடத்துவதற்காகவே இந்த பிரதிநிதிகள் குழு இலங்கை வரவுள்ளது. நாடு பொருளாதாரத்தில் முன்னேறி வருவதுடன் இந்த வருடத்தின் முதல் காலாண்டில் 5.1 சதவீத பொருளாதார வளர்ச்சி எட்டப்பட்டுள்ளது. இந்த பொருளாதார முன்னேற்ற நிலையை வருடம் முழுவதற்கும் தக்க வைத்துக் கொள்வதே எமது எதிர்பார்ப்பு.

எவ்வாறெனினும் தேர்தல் காலங்கள் பொருளாதார முன்னேற்ற வேகத்திற்கு தடையாக அமையாது என்பதே எமது நம்பிக்கை. இவ்வாறு தடையாக அமையாவிட்டால் இந்த வருடத்தில் 3.5 வீத பொருளாதார வளர்ச்சி வேகத்தை எட்ட முடியும். இது சிறந்த பெறுபேறாக அமையும் என்றார்.

## இந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்ட சொற்பொழிவில் கலந்து கொண்டு 'அவுஸ்திரேலியாவும் இந்து சமுத்திரமும்' என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றிய போதே அவர் இதனைக் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் உள்ள நாடுகள் தமது தேசிய நலன்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் எனவும், பலவந்தமாக அல்லது தமது இறையாண்மையில் சிக்கலை ஏற்படுத்தக்கூடிய ஏற்பாடுகளைத் தவிர்க்க வேண்டும்.

புவிசார் அரசியல் அழுத்தங்களுக்கு முன்னால் சிறிய மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு ஆதரவளிப்பதில் இந்து சமுத்திரம் மற்றும் அவுஸ்திரேலியாவின் பங்களிப்பின் மூலோபாய முக்கியத்துவம் மிக்கது.

உலகின் வல்லரசு நாடுகளின் அதிகரித்து வரும் அழுத்தங்களின் முன்னால், பல்வேறு நாடுகளும் அவற்றை எதிர்ப்பதன் மூலம் தங்கள் நாட்டின் இறையாண்மையைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் ஏற்பட்டுள்ளது. மேலும், தற்போதைய உலகில் அரசியல் நம்பிக்கைகள் அல்லது சித்தாந்தங்களை மாற்றுவதைவிட பொருளாதாரக் காரணிகள் அரசியல் நிகழ்வுகள் மற்றும் முடிவுகளில் அதிக தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

கொவிட்-19 தொற்று, உலகெங்கிலும் உள்ள நாடுகளில் பாரிய பொருளாதார சரிவை ஏற்படுத்தியது என்றும், அந்த நெருக்கடியின் போது எடுக்கப்பட்ட தேவையான நிதி நடவடிக்கைகளின் விளைவாக, நாடுகளில் பணவீக்கம் அதிகரித்தது.

இந்த நடவடிக்கைகள் அவசியமானதாக இருந்தாலும், அவை வட்டி விகிதங்கள் அதிகரிப்பதற்கும், உலகெங்கிலும் மோசமான வாழ்க்கைச் செலவுகளுக்கும் வழிவகுத்தன. உலகளவில் நாடுகளின் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டியதன் காரணமாக உயரும் பாதுகாப்புச் செலவுகள் பணவீக்கத்தை அதிகரிக்கின்றன.

நீடிக்கப்பட்ட நிதிக் கொள்கைகள் மற்றும் அதிக வட்டி விகிதங்கள் உள்ளடங்கிய இந்த புதிய பொருளாதார சூழலை நிர்வகிப்பதில் ஆளும்தரப்புகள் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்ளும். பல்வேறு நாடுகளில் உள்ள ஆளும் தரப்புகளும் வர்த்தகங்களும் தங்கள் பொருளாதார தீர்மானத்தின் போது, புவிசார் அரசியல் அபாயங்களைப் புரிந்துகொண்டு அவற்றையும் உள்ளடக்க வேண்டும் - என்றார்.

## ஞானசார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினால் தீவிரவாதிகள் என குற்றம்சாட்டப்பட்டு கைதுசெய்யப் படுவார்கள் என அவர் அச்சம் கொண்டிருந்தார்.

சர்வதேச பயங்கரவாத அமைப்புகளின் செல்வாக்கு காரணமாக இஸ்லாமிய தீவிரவாதிகள் மிகவும் பயங்கரமான தாக்குதலொன்றை ஆசியாவில் மேற்கொள்வதற்கு இலங்கையை தெரிவு செய்துள்ளனர் என அவ்வேளை பாதுகாப்பு செயலாளராகயிருந்த கோட்டாபய ராஜபக்சவிடம் தெரிவிக்குமாறு அந்த ஷேக் என்னைக் கேட்டுக்கொண்டார்.

அந்தத் தாக்குதல் இஸ்லாத்திற்கு அவமரியாதை ஏற்படுத்தும் விதத்தில் காணப்படும் என அவர் தெரிவித்திருந்தார். இலங்கையின் பிரதான மதங்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் இந்த தாக்குதல்களால் 2000க்கும் அதிகமானவர்கள் கொல்லப் படுவார்கள், மதநிகழ்வுகளில் இந்த தாக்குதல்கள் இடம்பெறலாம் என அவர் தெரிவித்திருந்தார்.

கடும் எதிர்வினைகள் எழக்கூடும் என்ற போதிலும் இது குறித்து பாதுகாப்பு செயலாளருக்கு தெரிவிப்பதை தவிர எங்களிற்கு வேறுவழியிருக்கவில்லை. இதனை தொடர்ந்து பல அரசியல்வாதிகள் எங்கள் மீது குற்றச்சாட்டுகளை சுமத்தினார்கள். நாங்கள்தான் தீவிரவாதிகள் என்றார்கள். ஆனால் பாதுகாப்புச் செயலாளர் அந்தத் தாக்குதலை முறியடிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தார் - என்றார்.

## வெள்ளம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுவதற்கு முன்பே அதைத் தணிக்க நடவடிக்கை எடுத்தால், நாம் செலவழிப்பதை விட அதிகப் பணத்தைச் சேமிக்க முடியும்.

டெங்குவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கான செலவு, டெங்கு நோய்க்கான சுகாதார சேவைகளின் செலவைவிட மிகக் குறைவாக இருக்கும் என்பதையும் கூறவேண்டும். உயிரிழப்பு மற்றும் குடும்ப உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை பணத்தால் மதிப்பிட முடியாது என்பதைபுரிந்துகொள்ளவேண்டும்.

இவை அனைத்தையும் பற்றி சரியான முடிவுகளை எடுக்க வேண்டிய நேரம் ஏற்பட்டுள்ளது. இந்த முடிவுகள் மக்கள் ஏற்பதற்குக் கடினமானவையாக இருக்கலாம். பிரபலமாக இல்லாவிட்டாலும் சரியான முடிவுகளை எடுக்க வேண்டும். பிரபல்யமற்ற முடிவுகளை எடுத்ததால் தான் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாம் மீண்டு வர முடிந்தது. அத்தகைய முடிவுகளின் பயனை சில ஆண்டுகளுக்குப் பிறகுதான் கண்டுகொள்ள முடியும்.

நாம் செய்த கட்டமைப்பு ரீதியிலான மறுசீரமைப்புகள் காரணமாக, வர்த்தகம், தொழில்துறை மற்றும் முதலீடுகளை மேற்கொள்ள முடிந்தது. தற்போதைய ஆளும்தரப்பு மோசடி மற்றும் ஊழலைக் குறைப்பதற்கான கட்டமைப்பு ரீதியிலான சீர்திருத்தங்களையும் மேற்கொண்டுள்ளது. இந்த நடவடிக்கைகளின் போது எடுக்கப்பட்ட முடிவுகள் பிரபல்யமானதாக இருக்கவில்லை. ஆனால் இலங்கையில் தேர்தல்கள் நெருங்கும்போது பிரபலமான முடிவுகளை எடுப்பதே வழக்கமாக இருந்துள்ளது.

ஆனாலும், வெள்ளம், டெங்கு போன்ற பிரச்சினைகளில் பிரபல்யமற்ற கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டியுள்ளது. கடந்த அனர்த்த நிலைமைகளின்போது, எமது நாட்டின் பொறிமுறை, மக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் அந்த பேரிடர் நிலைமைக்கு பெரிதும் தாக்கம் செலுத்தியுள்ளமையை கண்டுகொள்ள முடிந்தது. அதன்படி தவறான இடத்தில் வீடு கட்டப்பட்டு, வடிகால்கள் அடைக்கப்பட்டு, சிலர் வயல் நிலங்களை நிரப்பி தங்கள் வீட்டிற்கு செல்ல வீதிகளை அமைத்திருப்பதையும் காண முடிகிறது.

நகரில் தேங்கியுள்ள நீர் வெளியேற முடியாமல் வடிகால்களில் அடைப்பு ஏற்பட்டுள்ளது. அல்லது ஆற்றைத் தடுத்து, ஒரு தாழ்வான நிலத்தை நிரப்பி காணிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அல்லது தவறான அனுமதியைப் பெற்று அல்லது திருட்டுத்தனமாக சதுப்பு நிலங்கள் நிரப்பப்படுகின்றன.

இல்லையெனில், அதிகாரம் தவறாக பயன்படுத்தப்பட்டு, நிலங்களை நிரப்பும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறான பல்வேறு தவறுகள் இன்று நாம் இருக்கும் நிலைக்கு நம்மை இட்டுச் சென்றுள்ளது. அப்படியானால், இந்த தவறுகள் இப்போதேனும் திருத்தப்பட வேண்டும்.

டெங்கு நோயும் இதே நிலையை எட்டியுள்ளது. மக்களாகிய நாம் நமது பொறுப்பை சரியாக நிறைவேற்றினால் டெங்கு நோய் இந்தளவு பரவாது. அப்படியானால், இந்த நிலைமையை கட்டுப்படுத்த சட்டங்களை உருவாக்க வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் இந்த நாடு கட்டியெழுப்பப்படாது.

கொழும்பு வேகமாக அபிவிருத்தி செய்யப்பட தயாராக இருந்தாலும், அபிவிருத்தியடைந்த பின்னரும் வெள்ளத்தில் மூழ்கினால், அந்த அபிவிருத்தியில் பயனில்லை. நாம் நீரில் மூழ்காமல் அபிவிருத்தி செய்ய வேண்டும். பொதுமக்கள் மற்றும் அரச அலுவலர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அரச நிதியை பயன்படுத்த வேண்டும்.

பழைய தரவுகளின் அடிப்படையில், புதிய தொழில்நுட்பத்தின் மூலம் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி எந்தத் துறையிலும் முடிவுகளை எடுக்க முடியும். அதன்போது, தவறுகளை பெருமளவு குறைக்க முடியும். வானிலை முறைகள், புவியியல் தரவு, செயற்கைக் கோள் படங்கள், சுற்றுச்சூழல் காரணிகள் போன்றவற்றை பகுப்பாய்வு செய்து அனர்த்தங்களின் நிகழ்தகவுகளை கணிக்க முடியும். இதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் செஞ்சிலுவை சங்கம் இணைந்து தலைமைத்துவம் ஏற்று செயற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.' என்றார்.

## அமைச்சரவை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கேள்வி எழுப்பினார்.

கொழும்பில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்பு நிறைவுப் பெறும்வரை அரசமைப்பின் 22ஆவது திருத்தத்தை வர்த்தமானி அறிவித்தலில் வெளியிட வேண்டாம் என தனது செயலாருக்கு ஆலோசனை வழங்கியிருந்தார் என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச ஜூலை 18 தெரிவித்த நிலையில் மறுநாள் ஜூலை 19 சட்டமூலத்தை ஜனாதிபதி வர்த்தமானியில் வெளியிட்டார்.

ஜனாதிபதியின் செயற்பாட்டினால் அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. 22ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்ற நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெறுவதுடன், சர்வஜன வாக்கெடுப்புக்கும் செல்லவேண்டும்.

நிதிப் பற்றாக்குறை காரணமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் மீது முறையற்ற வகையில் வரிவிதிக்கப்பட்டுள்ளது. கடினமான முறையில் ஜனாதிபதித் தேர்தலுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் பல மில்லியன் ரூபா செலவு செய்து சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லும் இயலுமை ஆளும் தரப்பிடம் உள்ளதா?

சர்வஜன வாக்கெடுப்புக்கு தயார் என்று ஜனாதிபதி குறிப்பிடலாம். ஆனால் அதற்கு அவரது தனிப்பட்ட நிதி பயன்படுத்தப்படமாட்டாது. நாட்டு மக்களின் வரிப்பணமே பயன்படுத்தப்படும். மக்களின் வரிப்பணத்தை வீண்விரயம் செய்ய மக்கள் பிரதிநிதிகள் தயாராக உள்ளார்களா?

அரசமைப்பின் 19ஆவது திருத்தம் 2015ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.10 ஆண்டுகள் நிறைவு பெறவுள்ள நிலையில் உறக்கத்தில் இருந்து எழுந்ததைப் போன்று சட்டத்தை திருத்தம் செய்யவேண்டும் என்று குறிப்பிடுகிறார். பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் பல மில்லியன் ரூபா செலவு செய்து சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்வது பயனற்றது என்றார்.

## ஹிருணிக்கா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ள்பபட்டபோது நீதிபதி இவ்வுத்தரவை வழங்கியுள்ளார்.

தனக்கு வழங்கப்பட்ட சிறைத் தண்டனைக்கு எதிராக ஹிருணிகா பிரேமச்சந்திர மேன்முறையீடு செய்துள்ள நிலையில், அவரை பிணையில் விடுவிக்குமாறு அவரது சட்டத்தரணிகள் முன்வைத்த பிணை கோரிக்கைக்கு அமைய இந்த உத்தரவு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 50,000 ரூபா ரொக்கம் மற்றும் 500,000 ரூபா கொண்ட இரண்டு சரீரப் பிணைகளில் அவரை விடுவிக்க நீதிபதி உதரவிட்டார். பிணை உத்தரவுகளை அறிவித்த நீதிபதி, ஹிருணிகாவிற்கு வெளிநாடு செல்வதற்கும் தடை விதித்தார். ஹிருணிகா பிரேமச்சந்திர சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி நளிந்த இந்ததிஸ்ஸ ஆஜராகியிருந்தார்.

சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனகபண்டார ஆஜராகியிருந்தார். ஹிருணிகா பிரேமச்சந்திரவை பிணைக் கோரிக்கைக்கு ஆட்சேபனைகளை தாக்கல் செய்யவுள்ளதாக சட்ட மா அதிபர் கடந்த அமர்வில் கொழும்பு மேல் நீதிமன்றில் அறிவித்திருந்தார்.

தெமட்டகொடை பகுதியிலுள்ள கடை ஒன்றில் பணிபுரிந்த அமில பிரியந்த அமரசிங்க எனும் இளைஞர் ஒருவரை 2015 டிசம்பர் 21 ஹிருணிகா பிரேமச்சந்திரவிற்கு சொந்தமான டிபெண்டர் வாகனத்தில் கடத்திய வழக்கு விசாரணை முடிவில் அவருக்கு 3 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

29 குற்றங்கள் தொடர்பில் அவரது மெய்ப்பாதுகாவலர்கள் 8 பேரும் குற்றத்தை ஒப்புக் கொண்ட நிலையில், அச்சம்பத்திற்கு உதவி, ஒத்தாசை புரிந்ததாக ஹிருணிகா மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

மேலும், இந்த சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபர் கொழும்பு மேல்நீதிமன்றில் குற்றச்சாட்டுக்களை தாக்கல் செய்திருந்தார். அத்தோடு, சம்பவம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட ஹிருணிகா பிரேமச்சந்திரவின் ஆதரவாளர்கள் 8 பேர் நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கடத்தியதாக சந்தேகத்தின் பேரில் கைதான ஐந்தாம் சந்தேகநபரின் மகள் அளித்துள்ள வாக்குமூலத்தில், தமது தாயாருடன் தொடர்பு பேணிய நபர் ஒருவரை தாம் காண்பித்தார் என்றும் அவரைத் தமது தந்தையும் அவருடன் சென்றவர்களும் ஜீப்பில் ஏற்றிக்கொண்டு ஹிருணிகாவிடம் அழைத்துச்சென்றனர் என்றும் சிறுமி பொலிஸாரிடம் தெரிவித்திருந்தார்.

## உரிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படும்' போன்ற பதாதைகளை ஏந்தியவாறு' பிரஜைகள் கூட்டணி' அமைப்பின் உறுப்பினர்கள் அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

# யாழில் இளம் குடும்பஸ்தர் மீது வாள்வெட்டு தாக்குதல்

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பகுதியில்வீதியால்மோட்டார்சைக்கிளில் சென்ற இளம் குடும்பஸ்தர் மீது வாள்வெட்டுக் குழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை மாலை வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி மத்தி பகுதியில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இதன்போது 28 வயது இளைஞன் மீதும்அவரதுமோட்டார்சைக்கிள்மீதும் வாள்களாலும் இரும்புக் கம்பிகளாலும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

அராலி மத்தி குமுக்கன் குள வீதியால் சென்ற இளம் குடும்பஸ்தரை, ஒட்டோவில் வந்த 4 பேர் கொண்ட கும்பல் ஒன்று மறித்து அவர் மீது வாளால் வீசியது.

இதன்போது அவர் விலத்திய நிலையில் குறித்த வெட்டு அவரது மோட்டார் சைக்கிள் மீது சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

பின்னர் அந்த குழு அவரது மோட்டார் சைக்கிள் மீது கம்பிகளாலும் வாளாலும் தாக்குதல் நடத்திவிட்டுச் சென்றது.

இவ்வாறு சென்ற குறித்த கும்பல் அராலி மத்தி பகுதியில் மோட்டார் சைக்கிளில்வந்த இளைஞனைமறித்து தாக்குதல் நடத்தியது.

இதன்போது குறித்த இளைஞனின் கையில்வாள்வெட்டுகாயமும், உடலில் அடி காயமும் ஏற்பட்டது.

இந்நிலையில் தாக்குதலுக்கு உள்ளானவர்கள் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு சென்று அங்கு இது குறித்து தெரியப்படுத்தி விட்டு, குறித்த கும்பல் ஊரை விட்டு இன்னமும் வெளியேறவில்லை நீங்கள் வந்தால் அவர்களை கைது செய்யலாம் என தெரிவித்தும் பொலிஸார் அசண்டையீனமாக செயற்பட்டுஅவர்களைவெளியேற்றினர் எனக் குற்றம் சாட்டப்படுகிறது.

பின்னர் குறித்த இளைஞன் 107 என்ற அவசர இலக்கத்துக்கு தொடர்புகொண்டு அவர்களுக்கு இது தொடர்பில் தெரியப்படுத்திய பின்னரே பொலிஸார்இதுதொடர்பாகவிசாரணை செய்துவிட்டு சம்பவ இடத்திற்கு சென்றதாகப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட இருவரும் வட்டுக்கோட்டைபொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்த நிலையில் பொலிஸ் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.(05)

# நண்பர்களுடன் மதுபானம் அருந்திய நபர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை

ஹம்பேகமுவபொலிஸ்பிரிவுக்குட்பட்டகுகுல்கடுவ பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என ஹம்பேகமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மத்துகம பகுதியில் வசிக்கும் 51 வயதுடைய நபரொருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்டவர் மேலும் இரண்டு நண்பர்களுடன் இணைந்து மதுபானம் அருந்திக் கொண்டிருந்துள்ள நிலையில், நண்பர்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கொலைசெய்யப்பட்டவரதுசடலம்எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில், ஹம்பேகமுவ பகுதியில் வசிக்கும் 25 மற்றும் 27 வயதுடைய இரண்டுசந்தேகநபர்கள்கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹம்பேகமுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# சிறைக்கு பார்வையாளராக சென்ற பெண் ஒருவர் கைது

## உள்ளே இருப்பவருக்கு போதைப் பொருள் கடத்தினாராம்

போதைப்பொருள்தொடர்பானவழக்குதொடர்பில் பல்லேகல தும்பர போகம்பர சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளநபருக்குவழங்குவதற்காக பெண்ணொருவரால் ஆடையில் மறைத்துக் கொண்டு வரப்பட்டுள்ள 2080 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் சிறைச்சாலை பாதுகாப்பு அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 38 வயதுடைய பெண் கெங்கல்ல பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் இப்பெண் போதைப்பொருள் வைத்திருந்தமை தொடர்பில் பல வழக்குகள் அவர் மீது இருக்கின்றன என விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகத்தின்பேரில்கைதுசெய்யப்பட்டமேற்படி பெண் மேலதிக விசாரணைகளுக்காகப் பல்லேகல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (05)



## மாவடிக் கந்தசுவாமி ஆலய ஆடிவேல் மகோற்சவ தீர்த்தம்





(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவுமாவடிஸ்ரீகந்தசுவாமி ஆலய வருடாந்த ஆடிவேல் விழா மஹோற்சவ தீர்த்தோற்சவம் நேற்று (திங்கட்கிழமை) சிறப்பாக நடைபெற்றது.



கடந்த 06 ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கிய இம் மகோற்சவம் தினமும் பகல் இரவுதிருவிழாவாக வசந்தமண்டப பூஜையும்சுவாமிஉள்வீதிவெளிவீதி வருதலும் இடம்பெற்று வந்தது.

நேற்றுமுருகப்பெருமான்காவடி சகிதம் ஊர்வலமாக வந்து சமுத்திர தீர்த்தம் இடம் பெற்றது. (05)









காலைக்கதிர்
Kalaikkathir

# முன்னாள் அமைச்சர் மர்ஹூம் மன்சூர் பற்றிய நினைவுப் பேருரையும் பரிசளிப்பு வைபவமும்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர். மன்சூர் நினைவு தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயத்தால் நடத்தப்பட்ட முன்னாள் அமைச்சர் ஏ.ஆர். மன்சூரின் 'கறை படியாச் சேவைகள்' எனும் தலைப்பில் இடம்பெற்ற நினைவு தின கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேஷனின் அனுசரணையில், சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் வித்தியாலய அதிபர் எம்.எஸ்.எம். ஆரிப் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம அதிதியாக சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி அஸ்மா மலிக் கலந்து கொள்வார்.

முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர். மன்சூர் பற்றிய நினைவுப் பேருரையை முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும் ஓய்வுபெற்ற அதிபருமான ஏ.அப்துல் கபூர் ஆற்றுவார்.

இதன்போது கட்டுரைப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர். மன்சூரின் அவரது மறுமை ஈடேற்றத்திற்காக துஆப் பிரார்த்தனை ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(05)

# காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளுக்கு கிளிநொச்சியில் உதவித்தொகை வழங்கல்





தற்போதைய பொருளாதார நெருக்கடியில் காணாமல்ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு இரண்டு இலட்சம் ரூபா உதவித்தொகை வழங்கும் பொருட்டு கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் 30பேருக்கான பதிவு இன்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் முன்னெடுக்கப்பட்டது.அழைக்கப்பட்ட 30பேரும் தமது பதிவுகளை இன்றைய தினம் மேற்கொண்டனர்.இழப்பீட்டுக்கான அலுவகத்தினுடைய பணிப்பாளர் நாயகம் ஜே.கிருஸ்ணமூர்த்தி அவர்கள் உத்தியோகத்தர்களை சந்திக்கும் பொருட்டு கிளிநொச்சி மாவட்ட செயலகம் வந்திருந்தார்.இதுவரை இழப்பீட்டு அலுவலகத்தினால் பொருளாதார நெருக்கடியில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் 2500பேருக்கு இரண்டு இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனையவர்களுக்கு வெகுவிரைவில் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். (05 - 113)



# காத்தான்குடியில் கைக்குண்டு மீட்பு

## இராணுவம், விசேட அதிரடிப் படை விசாரணை

காத்தான் குடியில் பூநொச்சிமுனையில் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான வீடுஒன்றுக்குஅருகிலுள்ளவீடுஒன்றின் முன்பாக உள்ள வடிகான் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் கைக்குண்டு ஒன்றை ஞாயிற்றுக்கிழமை மாலை இரவு காணப்பட்டதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

பூநொச்சிமுனையில் பச்சை வீட்டுத்திட்டம் என அழைக்கப்படும் முகைதீன் ஜூம்ஆ பள்ளி வீதியில் வீடு ஒன்றின் முன்னால் உள்ள வடிகானுக்குஅருகில்கைக்குண்டுஒன்று கிடப்பதை அவதானித்த பொதுமக்கள் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இதனையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று குறித்த கைக்குண்டை மீட்பதற்கு நீதிமன்ற அனுமதியை பெறுவதற்கான நடவடிக்கையை முன்னெடுத்ததுடன் விசேட அதிரடிப்படையின் குண்டு செயலிழக்கும் பிரிவினர் அழைக்கப்பட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர்.

இதேவேளை இந்த கைக்குண்டு மீட்கப்பட்டவீட்டுக்குஅருகிலுள்ளவீட்டின் மீது கடந்த 15 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு இனந்தெரியாதோரால் குண்டு வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்று (திங்கட் கிழமை) காலை முதல் குறித்த கைக்குண்டு மீட்கப்பட்ட இடத்திற்கு அருகிலுள்ள வீடுகளில் பொலிஸார் தேடுதல்நடவடிக்கைகளைமேற்கொண்டனர். (05)

# உதவிப் பிரதேச செயலருக்கு மூதூரில் பெரும் வரவேற்பு

(எஸ்.எல்.நௌபர்)

மூதூர் பிரதேச செயலகத்திற்கு உதவிப்பிரதேச செயலாளராக புதிதாக



நியமிக்கப்பட்டுள்ள.உதவிப்பிரதேச செயலாளர்திருமதி. பாத்திமா றொசானா றசீம் அவர்களை வரவேற்கும் நிகழ்வு மூதூர் பிரதேச செயலாளர் எம்.எச்.முகமட் கனி தலைமையில் நேற்று (திங்கட்கிழமை) மூதூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது உதவிப்பிரதேச செயலாளர் அலுவலக உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோரால் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டார். புதிதாக நியமிக்கப்பட்டுள்ள உதவிப்பிரதேச செயலாளர் றொசானா றசீம் இங்கு உரையாற்றியமை குறிப்பிடத் தக்கது. (05)

**சாய்ந்தமருது கொலை சம்பவம்;**

# தலைமறைவான பிரதான சந்தேகநபர் உட்பட ஐந்து பேர் பொலிஸாரால் கைது

(பாறுக் ஷிஹான்)

தனது மாமனாரைத் தாக்கி கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட பிரதான சந்தேக நபர் உட்பட ஐவர் தலைமறைவாகிஇருந்தநிலையில் ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறைமாவட்டம்சாய்ந்த மருதுபொலிஸ்பிரிவிற்குட்பட்ட பொலிவேரியன் கிராமம் பிரிவு-09 பகுதியில் உள்ள வீடு ஒன்றில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் குறித்த சம்பவத்தில் தாக்குதலுக்கு உள்ளாகி 62 வயதுடைய மீராசாயிப் சின்னராசா என்பவர் மரணமடைந்திருந்தார்.

இவ்வாறு மரணமடைந்தவரின் சடலம் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் வைக்கப்பட்ட பின்னர் மேலதிக விசாரணைக்காக அம்பாறை பொதுவைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டு விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் இரவு கையளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சம்பவ இடத்திற்கு கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் அப்துல் ரசீட் முஹம்மது கலீல் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். இச்சம்பவத்தில் மாமனாரை தாக்கி படுகொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட பிரதான சந்தேக நபர் மட்டக் களப்பு மாவட்டம் வாழைச்சேனை பகுதியில் இருந்தும் ஏனைய நான்கு சந்தேக நபர்களும் சாய்ந்தமருது பகுதியில் இருந்தும் கைது செய்யப்பட்டிருந்தனர்.தனது மாமாவுடன் தகராறு செய்து வந்த பிரதான சந்தேக நபரான மருமகன் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்பதுடன் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திலும் இரு வேறு குற்றச்சாட்டிற்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

மேலும் கைதான 33 வயதான பிரதான சந்தேக நபர் உட்பட குறித்த கொலை சம்பவத்திற்கு உடந்தையாக செயற்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட 20 ,19,19, 18 வயது மதிக்கத்தக்க ஏனைய சந்தேக நபர்களை சட்ட நடவடிக்கைக்காக கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த சாய்ந்தமருது பொலிஸ் பொறுப்பதிகாரி சம்சுதீன் தலைமையிலான பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# சிறுவர்களுக்கான தடுப்பூசி வழங்கலை மேம்படுத்த ஜப்பானின் ஒத்துழைப்புடன் குளிரூட்டப்பட்ட ட்ரக்!




இலங்கைமுழுவதிலும்சிறுவர்களுக்கானதடுப்பூசி வழங்கல் முறைமையை மேம்படுத்துவதற்காக யுனிசெப் நிறுவனம் ஜப்பான் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் சுகாதார அமைச்சிற்கு ஒன்பது குளிரூட்டப்பட்ட ட்ரக் வண்டிகளை கையளித்தது.

இலங்கைக்கான ஜப்பான் நாட்டின் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி மற்றும் யுனிசெப் நிறுவனத்தின் இலங்கைக்கான செயல்படும் பிரதிநிதி பேகோனா அரேலானோ ஆகியோரின் பங்கேற்புடன் சுகாதார அமைச்சகத்தில் நடைபெற்ற நிகழ்வில் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பதிரனவிடம் அந்த ட்ரக் வண்டிகள் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் உரையாற்றிய வைத்தியர் ரமேஷ் பதிரன, இலங்கையின் சுகாதார முறைமையின்மிகவும்முக்கியதூண்களில்ஒன்றான நிர்ப்பீடனமாக்கல் செயற்றிட்டத்தினை மேலும் பலப்படுத்துவதற்காக ஜப்பான் அரசாங்கம் மற்றும் யுனிசெப் நிறுவனம் இணைந்து வழங்கும் இந்த ஒத்துழைப்பினை மனப்பூர்வமாக வரவேற்பதாக கூறி, இது தடுப்பூசிகளை பாதுகாப்பாக உரிய நேரத்திற்கே கொண்டு செல்வதற்கு சுகாதார அமைச்சிற்கு துணை நிற்கும் என்றும் குறிப்பிட்டார்.

ஜப்பான் அரசாங்கம் 2021ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையில் காலத்துக்குக் காலம் 3 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான குளிர்ச் சங்கிலி உபகரணத் தொகுதிகளை இலங்கையின் சுகாதார அமைச்சிற்கு வழங்கி வந்துள்ளன.

தடுப்பூசிகளை பாதுகாப்பான வெப்பநிலையில் களஞ்சியப்படுத்துவதற்காக பெரிய நடமாடும் குளிரூட்டப்பட்ட அறைகள், எடுத்துச் செல்லத்தக்க தடுப்பூசி கொள்கலன்கள் மற்றும் வெப்பநிலைக் கண்காணிப்பு மானிகள் என்பன ஏற்கனவே கையளிக்கப்பட்டகுளிர்ச்சங்கிலிஉபகரணங்களாகும். அதன் தொடராகவே இன்று குளிரூட்டப்பட்ட ட்ரக் வண்டிகள் கையளிக்கப்படுகின்றன.

இங்கு உரையாற்றிய இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் திரு. மிசுகோஷி ஹிடேகி, 'இலங்கையின் சுகாதார அமைச்சிற்கு ஒன்பது குளிரூட்டப்பட்ட ட்ரக் வண்டிகளை கையளிப்பதில் நான் பெருமிதம்கொள்கிறேன். இது இலங்கையின் பொதுச் சுகாதார சேவைகளை பலப்படுத்துவதற்காக ஜப்பான் தொடர்ச்சியாக வழங்கி வருகின்ற அர்ப்பணிப்பினை பறைசாட்டுமென உறுதியாக நம்புகிறேன்.

நாடு முழுவதும் தடுப்பூசிகளை தடையின்றி கொண்டு செல்வதற்கான முக்கியமான போக்குவரத்துச் சாதனமாக இந்த ட்ரக் வண்டிகள் விளங்குமென்பதோடு, ஒவ்வொரு சமூகமும் தடுக்கக்கூடிய நோய்களுக்கெதிராக அவசியமான பாதுகாப்பினைப் பெறுவதை உறுதி செய்யும்' என்றும் குறிப்பிட்டார்.

தடுப்பூசிகளை மத்திய களஞ்சிய அறையிலிருந்து பிராந்திய களஞ்சிய அறைகளுக்கும் அங்கிருந்து சுகாதார வசதிகளை வழங்கும் நிலையங்களுக்கும் கொண்டு செல்வதற்கு இந்த ட்ரக் வண்டிகள் உதவும். தடுப்பூசி கொள்கலன்கள் மற்றும் குளிர் பெட்டிகள் ஏற்கனவே சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் மற்றும் வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

'தடுப்பூசியேற்றல் சிறுவர்களை தடுக்கக்கூடிய நோய்களிலிருந்து பாதுகாப்பதுடன், அவர்களின் ஆரோக்கியமான வாழ்வுக்கு துணைநிற்கின்றது. தடுப்பூசிகள் வெப்பநிலை உணர்திறன் கொண்டவை என்பதால் அவற்றை பொருத்தமான நிலைமைகளில் கொண்டு செல்வது அவசியம்.

எனவே, இலங்கையின் ஒவ்வொரு மூலையிலும் வாழ்கின்ற ஒவ்வொரு குழந்தைக்கும் சரியான தடுப்பூசி சரியான நேரத்தில் சென்றடைவதற்கு இந்த ட்ரக் வண்டிகள் உதவும் என்பதில் ஐயமில்லை.

நாட்டின் சிறுவர்களின் சுகாதாரத்தினை மேம்படுத்துவதற்காக ஜப்பான் அரசாங்கத்தின் நீண்டகால ஆதரவையும் சுகாதார அமைச்சின் கூட்டு ஒத்துழைப்பினையும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் பெரிதும் மதிக்கின்றது' என யுனிசெப் நிறுவனத்தின் இலங்கைக்கான செயல்படும் பிரதிநிதி பேகோனா அரேலானோ இந்நிகழ்வில் தனது கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார்.

சிறுவர்களின் குறுகிய மற்றும் நீண்டகால தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியமும் சுகாதார அமைச்சும் இணைந்து மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஜப்பான் அரசாங்கம் பல ஆண்டுகளாக பாரிய பங்களிப்புக்களை வழங்கி வருகிறது.

(05)

# சுங்க திணைக்களத்தின் அதிகாரி மீது தாக்குதல்

களுத்துறை கடற்கரையில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சுங்க திணைக்கள நிர்வாக அதிகாரி ஒருவர் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளானவர் களுத் துறை பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

இவர் ஞாயிற்றுக்கிழமை களுத்துறை கடற்கரையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது அங்கு கடமையிலிருந்த பொலிஸ் அதிகாரிகள் சிலர் இவரை சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது, இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலுக்குள்ளானவர் களுத் துறை போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(05)

# சட்டவிரோத பீடி இலைகளுடன் புத்தளத்தில் ஒருவர் கைதானார்





புத்தளம், கற்பிட்டி, குடாவ கடற்கரை பகுதியில் படகு மூலம் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட பீடி இலைகளுடன் சந்தேக நபரொருவர் ஞாயிற்றுக்கிழமை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடல் வழியாக இடம்பெறும் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காகக் கடற்படையி னரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பு நடவடிக்கையின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம், கற்பிட்டி பகுதியில் வசிக்கும் 30 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து சட்டவி ரோதமாகக் கொண்டுவரப்பட்ட 189 கிலோகிராம் பீடி இலைகள் (6 பொதிகள் ) மற்றும் படகு என்பன கைப்பற் றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

(05)

# பதுளை மாணவர்களுக்கும் 5,770 புலமைப்பரிசில்கள்

## ஜனாதிபதி நிதியத்தில் இருந்து

பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள அனைத்து மாணவரின் கல்வி மேம்பாட்டுக்காக 'ஜனாதிபதி புலமைப்பரிசில் 2024' திட்டத்தின் ஊடாக உதவிகளை வழங்கும் பணி தற்போது மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 116,000 புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இதில் பதுளை மாவட்டத்தில் உள்ள 6 கல்வி வலயங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு 5,770 புலமைப்பரிசில்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

உயர்தரம் பயிலும் மாணவர்களுக்கு மாதாந்தம் தலா ரூ.6000 வீதம் 360 புலமைப்பரிசில்களும், தரம் 1 முதல் 11 வரை பயிலும் மாணவர்களுக்கு மாதாந்தம் தலா ரூ.3000 வீதம் 5,410 புலமைப்பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் துறைமுகங்கள், கப்பல், விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி நிதியத்தின் மூலம் செயற்படுத்தப்படும் இந்த புலமைப்பரிசில் திட்டத்துக்கு தேசிய அபிவிருத்தி லொத்தர் சபை பங்களிப்பு வழங்கியுள்ளது.(05)

# பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து போதைப்பொருள் விற்ற பெண் கைதானார்

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட பெண் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் கடவத்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொனஹேன பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வேபட பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய பெண்ணொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 230 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காகக் கடவத்தை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.(05)

# அமைச்சர் ஜீவனை கைதுசெய்ய உத்தரவு

களனிவெளி பிராந்திய பெருந்தோட்ட கம்பனிக்கு சொந்தமான தேயிலைத்தோட்டங்களில் அத்துமீறி நுழைந்து குழப்ப நிலையை ஏற்படுத்தியமைக்காக அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட சந்தேக நபர்களை கைது செய்து எதிர்வரும் 26.08.2024 அன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நுவரெலியா நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் ஜயமினி அம்பகாவத்த திங்கட்கிழமை பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பில் சிரேஷ்ட சட்டத்தரணி பாலித சுபசிங்ஹ ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் -

கடந்த மே மாதம் 30 ஆம் திகதி களனிவெளி பெருந்தோட்ட நிறுவனத்திற்கு சொந்தமான நுவரெலியா பீட்று தோட்டத்துக்குள்ளும் அங்குள்ள தொழிற்சாலைக்குள்ளும், அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட அவரது ஆதரவாளர்கள் அத்துமீறி பிரவேசித்தமை அங்கு குழப்ப நிலைமைகளை உருவாக்கியமை உட்பட பல சம்பவங்கள் தொடர்பாக நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் களனிவெளி பெருந்தோட்ட நிறுவனத்தின் அதிகாரிகளால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில் நுவரெலியா பொலிஸார் மேற்கொண்ட விரிவான விசாரணையின் பின்பு இந்த அறிக்கை நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தில் இன்றைய தினம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கையை அவதானித்த பதில் நீதவான், அமைச்சர் ஜீவன் தொண்டமான் உட்பட சந்தேகநபர்களை கைது செய்து 26.08.2024 அன்று நீதிமன்றத்தில் ஆஜர்' செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவித்தார். இதன் போது களனி வெளி பெருந்தோட்ட நிறுவனத்தின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி அநுர மெத்தேகொட மற்றும் சட்டத்தரணி சுரேஸ்கயான் ஆகியோர் நீதிமன்றத்தில் நேற்று ஆஜராகியிருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் அமைச்சர் தொண்டமான் மற்றும் ஏனைய சந்தேக நபர்களை நேற்று நீதிமன்றில் ஆஜராகுமாறு நுவரெலியா பொலிஸாரால் அழைப்பாணை விடுக் கப்பட்டிருந்த போதிலும் குறித்த குழு வினர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.07.2024இல் வெளியிடப்பெற்றது